

(எட்டாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 103.]

பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2019 நவெம்பர் 11, திங்கட்கிழமை மு.ப. 11.30 மணிக்கு

சமுகமளித்தோர்:

கௌரவ கரு ஜயசூரிய, சபாநாயகர்

கௌரவ ஜோன் அமரதுங்க, சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர்

கௌரவ கயந்த கருணாதிலக்க, காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசானும்

கௌரவ ரவி கருணாநாயக்க, மின்வலு, எரிசக்தி மற்றும் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ லசஷ்மன் கிரிஎல்ல, அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சரும் பாராளுமன்றச் சபை முதல்வரும்

கௌரவ ஹரின் பர்னாந்து, தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்

கௌரவ அர்ஜுன ரணதுங்க, போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்

கௌரவ மலிக் சமரவிக்ரம, அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்

கௌரவ பி. ஹரிசன், கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ அஜித் பி. பெரேரா, அமைச்சரவை அந்தஸ்த்தற்ற டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர்

கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன், அமைச்சரவை அந்தஸ்த்தற்ற விசேட பிரதேசங்கள் அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ லக்கி ஜயவர்தன, நகரத் திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி இராஜாங்க அமைச்சர்

கௌரவ புத்திக பத்திரண, கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

கௌரவ இரான் விக்கிரமரத்ன, நிதி இராஜாங்க அமைச்சர்

கௌரவ வடிவேல் சுரேஷ், பெருந்தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

கௌரவ எட்வட் குணசேகர, காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு பிரதி அமைச்சர்

கௌரவ சிசிர குமார அபேசேகர

கௌரவ லஸந்த அலகியவன்ன

கௌரவ அ. அரவிந்த் குமார்

கௌரவ தினேஷ் குணவர்தன

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன

கௌரவ சிசிர ஜயகொடி

கௌரவ சிறினால் டி. மெல்

கௌரவ நிமல் சிறிபால த சில்வா

கௌரவ மனுஷ நாணாயக்கார

கௌரவ முஹம்மது நசீர்

கௌரவ இ. சார்ஸ் நிர்மலநாதன்

கௌரவ சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ ஏ. டி. சுசில் பிரேமஜயந்த

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க

கௌரவ பிமல் ரத்நாயக்க

கௌரவ பிரசன்ன ரணவீர

கௌரவ காமினி லொக்குகே

கௌரவ விதுர விக்கிரமநாயக்க

கௌரவ ஏ.ஏ. விஜேதுங்க

கௌரவ துலீப் விஜேசேகர

கௌரவ திலங்க சுமதிபால

கௌரவ விஜித் விஜயமுணி சொய்சா

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி

கௌரவ மனோஜ் ஹேவாகம்பலகே

கௌரவ ஏ. எச். எம். பௌஸி

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. நீல் இத்தவல, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திருமதி குஷானி ரோஹனதீர, உதவிச் செயலாளர் நாயகம்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 16 இன் கீழ் சபாநாயகரின் 2019 நவம்பர் 07 ஆம் திகதிய அறிவித்தலின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1. பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்கான சபாநாயகரின் பின்வரும் அறிவித்தலைச் பாராளுமன்றச் செயலாளர் நாயகம் வாசித்தார்:—

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதிவிசேஷமானது

අංක 2148/30 - 2019 නොවැම්බර් මස 07 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.11.07

2148/30 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 07 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I : தொகுதி (I) - பொது

அரசாங்க அறிவித்தல்கள்

சபாநாயகரின் அறிவித்தல்

2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 11 ஆந் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தைக் கூட்டுதல்

கௌரவ பிரதம அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் நிலையியற் கட்டளை 16 இன் பிரகாரம், 2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 11 ஆந் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணிக்குப் பாராளுமன்றம் கூடுவதற்கு அழைப்பாணை விடுத்திருக்கிறேன் என்பதை பாராளுமன்றத்தின் சபாநாயகர் கரு ஜயசூரிய ஆகிய நான் இத்தால் அறிவிக்கிறேன்.

கரு ஜயசூரிய,
சபாநாயகர்.

ஸ்ரீ ஜயவர்தனபுரக் கோட்டே,
2019, நவெம்பர் 07.

1A - G 31106— 767 (2019/11) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

2. பத்திரங்கள் சமர்ப்பித்தல்: (1) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2017/18 ஆம் ஆண்டுக்கான சிறிலங்கன் எயார்லையின்ஸின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கையை பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் —

(i) 2018 ஆம் ஆண்டுக்கான இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை;

(ii) 2018 ஆம் ஆண்டுக்கான கொழும்புப் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை;

(iii) 2018 ஆம் ஆண்டுக்கான பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விவசாயப் பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் ஆண்டறிக்கை; மற்றும்

(iv) 2018 ஆம் ஆண்டுக்கான மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் தொழிநுட்ப நிறுவனத்தின் ஆண்டறிக்கை மற்றும் ஆண்டுக் கணக்குகள்

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகளை கல்வி மற்றும் மனித வள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் 2019.06.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட எட்டாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத் தொடரின் மூன்றாவது அறிக்கையில் கேகாலை, அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டச் செயலகங்களின் 2017 ஆம் ஆண்டின் செயலாற்றுகை தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கைகளைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகள், அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2017 ஆம் ஆண்டுக்கான வரையறுக்கப்பட்ட குருநாகல் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைகள் கம்பனியின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை, கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2016 ஆம் ஆண்டுக்கான தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை, வலுவாதார அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்: பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ ஹர்ஷன ராஜகருணா சார்பாக அக்குழுவின் உறுப்பினர் கௌரவ புத்திக பதிரண அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட, "தேசிய புத்தாக்க முகவராண்மை" எனும் சட்டமூலம் தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையை சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று

4. பாராளுமன்ற அமர்வுகள் (இல.1): பாராளுமன்றச் சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 11.30 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையும் இருக்குமாக. பி.ப. 2.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

5. பாராளுமன்ற அமர்வுகள் (இல.2): பாராளுமன்றச் சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2019 திசெம்பர் 03 ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை பி.ப. 1.00 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

6. விளையாட்டுக்கள் தொடர்பான தவறுகளைத் தடுத்தல் சட்டமூலம் : இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

"சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் மதிப்பீடு செய்யப்படுமாக" என தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு செய்யப்பட்டது.

"சட்டமூலம் முழுப்பாராளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக" தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுவில்)

சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1 ஆம் முதல் 41 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

சட்டமாக்கு வாசகமும் சட்டப்பெயரும்:

"சட்டமாக்கு வாசகமும் சட்டப் பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

"சட்டமூலம் இப்பொழுது மூன்றாவது முறையாக மதிப்பிடப்படுமாக" என தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதன்படி சட்டமூலம் மூன்றாம் முறையாக மதிப்பிடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

7. தேசிய புத்தாக்க முகவராண்மைச் சட்டமூலம் : இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

"சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் மதிப்பீடு செய்யப்படுமாக" என பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவர் சார்பாக அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்தார்.

"கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க தலைமை தாங்குவாராக" என காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 1.00 மணிக்கு கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு செய்யப்பட்டது.

"சட்டமூலம் முழுப்பாராளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக" பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவர் சார்பாக காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுவில்)

தலைமை தாங்கும் உறுப்பினர் தலைமை தாங்கினார்.

1 ஆம் முதல் 5 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

6 ஆம் வாசகம்

7 ஆம் பக்கத்தில் பதினைந்தாம் வரியை உடனடுத்துப் பினவருவதனை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவர் சார்பாக காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்:—

"(ix) அவ்வமைச்சினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட மேலதிகச் செயலாளர் ஒருவரின் பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையில் உள்ள கல்வி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சு அலுவலர்;

(x) அவ்வமைச்சினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட மேலதிகச் செயலாளர் ஒருவரின் பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையில் உள்ள உயர்கல்வி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்;

(xi) வர்த்தகத் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அத்திணைக்களத்தின் பணிப்பாளர் ஒருவரின் பதவி வரிசைக்குக் குறையாத பதவிவரிசையில் உள்ள அலுவலர் ஒருவர்;

(xii) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம்ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கை புத்தாக்குநருக்கான ஊக்குவிப்புக்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவின் ஆணையாளர் அல்லது இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அவ்வாணைக்குழுவின் எவரேனும் உதவி ஆணையாளர்; அத்துடன்"

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

7 ஆம் பக்கத்தில் பதினாறு முதல் 18 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவர் சார்பாக காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

"(xiii) இலங்கை நனோ தொழில்நுட்பவியல் நிறுவகத்தின் தவிசாளர் அல்லது அவரது நியமத்தர்; அத்துடன்"

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

7 ஆம் பக்கத்தில் பத்தொன்பதாம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவர் சார்பாக காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

"அமைச்சரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட".

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தில் ஒரு பகுதியாக இருத்தல் வேண்டும்" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

7 ஆம் முதல் 13 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

14 ஆம் வாசகம்

13 ஆம் பக்கத்தில் ஐந்து முதல் எட்டு வரையிலான வரிகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுமாறு பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவர் சார்பாக காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்:—

"இருப்பதற்கான எண்பிக்கப்பட்ட முகாமைத்துவ அனுபவத்துடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து புத்தாக்கம் ஒரு பாடமாக அறிவியல், தொழில்நுட்பவியல் அல்லது தொழில் முகாமைத்துவத்தில் பட்டப்பின் படிப்பு பட்டம் ஒன்றைக்கொண்டுள்ள ஆளொருவர்".

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தில் ஒரு பகுதியாக இருத்தல் வேண்டும்" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

15 ஆம் முதல் 28 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

சட்டமாக்கு வாசகமும் சட்டப் பெயரும்:

"சட்டமாக்கு வாசகமும் சட்டப் பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற" பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

"சட்டமூலம் இப்பொழுது மூன்றாவது முறையாக மதிப்பிடப்படுமாக"என பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவர் சார்பாக காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதன்படி சட்டமூலம் திருத்தங்களுடன் மூன்றாம் முறையாக மதிப்பிடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

8. ஒத்திவைப்பு: "இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" என காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பாராளுமன்றம் இன்றைய சபைத் தீர்மானத்திற்கிணங்க, பி.ப. 1.55 மணிக்கு, 2019 திசெம்பர் 03 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 1.00 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.